45-3

கொழும்பு

விவேகாநந்த சபையாரின்

கட்டளைக்கிணங்கி,

ஆய்ந்தபல அறிஞர்களால் எழுதப்பட்ட

"நாவலர் வசன நடை"

என்னும் கட்டுரைகளுள் முதன்மைபெற்ற

இந்த

# நாவலர் வசன நடை

கொழும்பு விவேகாநந்த வித்தியாலய

ஆசிரியர்,

பிரமஸ்ரீ சோ. ராமஸ்வாமி சர்மா அவர்களால்

எழுதப்பட்டது.

முதலாம் பதிப்பு.

கொழும்பு, ராபர்ட் அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

(14-11-1932)

காப்பிரைட்]

[விலை சதம். 25

# நூன்முகம்.

தமிழ் மொழியில் வசன நூல்கள் மிகச்சிலவாக விருந்த காலத்தில் யாழ்ப்பாணத்து நல்லூரில் அவதரித்துத் தமிழ் நூல்களையும் சைவ நூல்களையும் யாவரும் எளிதிலுணரக்கூடிய வசன நடையிலியற்றியளித்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களின் நூல்கள் பல்லோராற் கற்கப்படாது கிடக்கின்றமையையும், அது காரணமாக அவர்களது வசன நடையிலுள்ள சிறப்புக்கள் கவனிக்கப்படாதனவாக ஏனை வசன நடைகள் வரிசை பெறுவதையுங் கண்டு, நாவலர் வசன நடைச்சிறப்பை யாவருமுணர வைக்க வேண்டுமெனத் தூண்டப்பெற்ற எமது நண்பர், திருநெல்வேலிச் சைவாசிரியர் பயிற்சிக்கழகத்துத் துவிதீயாதிபர் சைவத் திருவாளர். பொ. கைலாசபதி அவர்கள், "நாவலர் வசன நடை" யென்பதை விஷயமாகக் கொண்டு, தமிழறிஞர் பலரையும் வியாசங்கள் எழுதச் செய்து முதன்மை பெறுவோர்க்குப் பரிசிலளித்தல் மேற்கூறிய குறையை நீக்குதற்கு ஒருவாறு வல்லதோருபாயமாமெனச் சபையார்க்குத் தெரிவித்துத் தாமே யப்பரிசையளிப்பதாகவு மொப்புக்கொண்டார்கள்.

அவ்வுபாயத்தைச் சபையார் அங்கீகரித்ததின் பயனாக எழுதப்பட்ட வியாசங்களுள் முதன்மைபெற்ற இக்கட்டுரையை யெழுதியவர் கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்து ஆசிரியர் பிரமஸ்ரீ சோ ராமஸ்வாமி சர்மா அவர்களாகும். சர்மா அவர்கள் வடமொழி தென்மொழி வல்லுநரும் வேதாகம சித்தாந்த மகா பண்டிதருமாக விளங்கும் யாழ்ப்பாணத்துச் சங்கானைப் பிரமஸ்ரீ அ. அருணாசல சாஸ்திரிகளது மாணாக்கரும் மருகரும் "வள்ளியம்மை திருமணப்படலத் தெய்வமெய்ப் பொருட்டிருவருள்விரிவுரை" யாசிரியருமாகிய பிரமஸ்ரீ க. சோமசுந்தரசர்மா அவர்களின் புத்திரராவர். பண்டிதர்கள் வழித்தோன்றிய ஆசிரியர் சர்மா அவர்கள் ஈதொரு நூலை வெளியிடுகின்றார்கள் என்பது பெருவியப்பன்று. ஆயினும் அனைவருக்கும் பொதுவாகநடந்த ஒரு கட்டுரைத்

திறமைத் தெரிவில் எமது வித்தியாலயத் தாசிரியருளொருவரும், எமது அபிமானத்துக்கும் நன்மதிப்புக்குமுரிய பண்டித வம்சத்தோன்றலுமாய வொருவர் வெற்றிபெற்று, அக்கட்டுரையையே தாம் முதன் முதலாக வெளியிடுமிந் நூலாக்கி, எமக்குத் தமிழளித்த தாதையாம் நாவலர் பெருமானின் குருபூஜைத் திருவோலக்க நன்னளில் அன்னர்க்குப் பரமப் பிரீதியாகத்தக்க பாதகாணிக்கையாகச் சமர்ப்பிக்க வாய்த்த பெரும்பேறே பெரிதும் பாராட்டற் குரியதாயிற்று.

நாவலர் வசன நூல்களனைத்தையும் நன்காராய்ந்து கட்டுரைவரைதற்குப் போதிய நேர வசதிவாய்க்கப்பெருமையாலே ஆசிரியர் சர்மா அவர்கள் இங்குவிரித்துக் கூருதுவிடுத்தனவும் கூறத்தவறியனவுமாய சிறப்புக்களையும் இனிமேலாராய்ந்தறியும் ஏனைச்சிறப்புக்களோடுஞ் சேர்த்து ஓர் விரிந்த நூலைச்செய்யுமாறு திருவருள் துணை நிற்பதாக.

இத்தெரிவை யேற்படுத்திய கொழும்பு விவேகானந்த சபையும், கட்டுரையை யெழுதிய நண்பர்களும், பரிசிலளித்த ஆசிரியரவர்களும், மத்தியஸ்தர்களாய்த் தொண்டு செய்த பண்டிதர்கள் திரு. ச. கணபதிப்பிள்ளை, திரு. வே. மகாலிங்கசிவம், திரு. முதலியார் செல்வத்துரைப் புறக்டர் ஆகியோர்களும் செந்தமிழ் நேயரதும் நாவலர் பக்தர்களதும் நன்றிக்கு என்றுமுரியர்.

செந்தமிழ் நாவல னல்லூ ரறுமுகன் செய்வசன
வந்தமிழ் நூல்க ளனைத்தையு மாய்ந்தே யவற்றினடைச்
சந்தமிளிர் சீர் தொகுத்திவ் வியாசஞ் சமைத்தனனு
லந்தண ரேருநமி ராமசுவாமி யாசிர்யனே.

ஆங்கீரச ஆண்டு
கார்த்திகைத் திங்கள்
மக நாள்

அ. வைத்தியலிங்கன்.



ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுக நாவலர் அவர்கள்.

# நாவலர் சரித்திரச் சுருக்கம்.

**யா**ழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள், வேளாளர் குலத்திலே, பாண்டி மழவர் குடியிலே சாலிவாகன சகாப்தம், ௧௭௪௪ சித்திரபானு ௵ மார்கழி ௴ 5-ந் ௳ (18th Dec 1822) புதன்கிழமை இரவு 10 நாழி நேரமளவில் சிங்கலக்கினமும் அவிட்ட நக்ஷத்திரமும் பூர்வபக்கப்பஞ்சமித்திதியும் வச்சிர நாம யோகமும் பாலவகரணமும் கூடிய சுபதினத்திலே, கந்தப்பிள்ளை என்பாருக்குப் புத்திரராய் சைவமும் தமிழும் தழைத்தோங்கத் தோன்றி யருளினர்.

இவர் ஐந்தாம் வயசிலே வித்தியாரம்பஞ் செய்யப்பெற்று, யாழ்ப்பாணத்திலிருந்த சுப்பிரமணிய உபாத்தியாயரிடமும், வித்துவசிரோமணியாகிய சேனாதிராய முதலியாரிடமும் முறையே கல்வி பயின்று, அப்பால் இலக்கிய இலக்கண வித்துவானாகிய சரவணமுத்துப் புலவரிடத்தே இலக்கிய இலக்கணங்களையும் ஞானநூல்களையும் கசடறக்கற்றுத் தெளிந்து பாண்டித்தியமடைந்தனர்.

பிரசங்கவன்மையும் வாக்குவல்லபமும் சிவபக்தியடியார் பக்தி முதலியனவும் பிறநல்லொழுக்கங்களும் அவரிடத்து இயற்கையிற்றானே குடிகொண்டிருந்தன.

இவர் ஜய ௵ முதலாக பீற்றர் பார்சிபல் துரையுடைய பள்ளிக்கூடத்திலே ஆங்கிலங் கற்றுத்தேறி, அத்துரையிடத்திற்றானே பிலவங்க ௵ முதல், தமிழ்ப்பண்டிதராகவிருந்து உத்தியோகம் பார்த்து வருங்காலத்து, சமயத்தையும் தமிழையும் வளர்க்கவேண்டுமென்ற பேரவா நெஞ்சையுந்த, அதனால், கீலக ௵ புரட்டாதி ௴ உத்தியோகத்தை வெறுக்க அது கண்டு பார்சிபல் துரை, "இன்னும் அதிக வேதனம் தருகிறேன் என்னிடத்திற்றானேயிரும்" என்று கூறவும், அதனையும் விரும்பாது உத்தியோகத்தைக் கைவிட்டனர். இது கண்டு நாவலர் சகோதரர்கள் "ஏன் உத்தியோகம் விட்டனை?" என்று கோபித்துக் குறைகூற, அதற்கு அவர்

"உங்களிடம் நான் பொருளுதவி செய்யும்படி கேளாதிருக்கக் கண்டு கொள்ளுங்கள்" என்று கூறி, தாமெண்ணித் துணிந்த கருமத்தி லீடுபட்டு, வண்ணை வைத்தீசுவரன்கோவில் மண்டபத்திலே பிலவங்க ௵ மார்கழி ௴ 18-ந் ௳ (31st Dec 1847) சுக்கிரவாரம் முதலாக ஒவ்வொரு சுக்கிரவாரந்தோறும் பிரசங்கஞ் செய்யத் தொடங்கவே, பரங்கிக்காரரோடு மங்கிய சைவம் பின்னரும் ஒளி பெறுவதாயிற்று.

கீலக ௵ ஆவணி ௴ (Aug 1848) வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையை ஸ்தாபித்து, அதில் கற்கும் மாணவர்க்குச் சமய அறிவூட்டும் நூல்கள் இல்லாதிருத்தலையும், இருந்தவையும் பிழைபல பொதிந்தனவாய்க் காணப்படுதலையுங்கண்டு, அச்சிலும் ஏட்டுப்பிரதியிலுமுள்ள பல நூல்களைப் பரிசோதித்துத் திருத்தியும் புதிதாகப் பலநூல்களை யியற்றியும் பயன்பெரிதுஞ் சித்திக்கப்பண்ணலாமென நினைத்து இவற்றிற்கெல்லாம் சொந்தப் பொறுப்பில் அச்சியந்திரமிருப்பதே சாலவும் நன்றென வெண்ணி, சௌமிய ௵ ஆடி ௴ (July 1849) சென்னைக்குச் செல்லப் புறப்பட்டு, வேதாரணியத்தையடைந்து, சுவாமி தரிசனை செய்து, பின்திருவாவடுதுறையாதீனத்தை யடைந்து, அங்கே இவரது கல்வி அறிவு ஒழுக்கங்களை முன்னரே கேள்விப்பட்ட அவ்வாதீன வித்துவான்களால் உபசரிக்கப்பட்டு அவரது ஆக்ஷேபங்களுக்கெல்லாம், சுருதியுக்தி அனுபவ மென்பவற்றோ டொட்டியபதி லளித்து, அவர்கள் பணித்தருளியபடி சைவப்பிரசங்கமாரி பொழிந்து, அவர்கள் மனசுக்குப் பெருமகிழ்ச்சியூட்டி, பண்டாரச் சந்நிதிகளால் அளிக்கப்பட்ட "நாவலர்" என்னும் திவ்விய நாமத்தைப் பெற்றனர்.

நாவலர் என்னும் பெயர், ஆறுமுக நாவலருக்கே உரிமைப் பெயராயுள்ளதென்பது, "நிலவுலகிலொருமதியம் நிலவியதென் றே நிகழ்த்தப், பலகலையுநிரம்பியாழ்ப்பாணமெனும்பார்கடலி, லிலகியெழீஇநாவலரென் றியப்புபெயரெவர்பெறினுங், குலவு தமையேகுறிக்கக்கொண்டபெருங்குலப்புகழார்" எனச் சேற்றூர்

சமஸ்தான வித்துவான் ஸ்ரீ அருணாசலக் கவிராயர் அவர்கள் சொல்லியபடி இது காலபரியந்தம் வழங்கப்பட்டு வருவதைக் காண்க. எனவே, நாவலர் என்ற மாத்திரத்தே அது ஆறுமுக நாவலரையே உணர்த்துகின்றதென்பதாம். இது உலகறிந்த வுண்மையாகும்.

இங்ஙனம் நாவலர் அவர்கள் சிறப்புடைப்பட்டத்தைப் பெற்றுப் பின், மற்றைய க்ஷேத்திரங்களுக்குஞ் சென்று தரிசித்துக்கொண்டு, சென்னையைச்சேர்ந்து, அச்சியந்திரத்தையும் வாங்கிக்கொண்டு திரும்ப யாழ்ப்பாணம் வந்து, அராலியிலேயுள்ள சிவன் கோவிலிலே நள ஹூ சித்திரை மீ (April 1856) நடைபெற்ற விக்கிநேசுரப் பிரதிட்டைக்கு, கெங்காதரக் குருக்களால் அழைக்கப்பட்டு ஆண்டுச் சென்று, தாம் பெருமானுக்குச் சமர்ப்பிப்பதற்காகத் திட்டஞ்செய்து வைத்திருந்த பட்டு வஸ்திரம் தாம்பூலம் முதலியவற்றைக்கொண்டுவர மறந்தமையின், விநாயகர், விசுவநாதர், விசாலாட்சி அம்மையார் முதலிய மூவர்க்கும் பாமாலை சூட்டி வணங்கினர். இங்ஙனம் சூட்டியபாட்டில், "நினதிரண்டு கழல் பணிந்திடின் மகப்பேறு முதலியாவையுங் கைகூடலரிதாகுமோ' என அமைத்தபடி அவ்வாசிரியருக்கு ஆண்மகன் பிறந்தானென்றால் அவர் (நாவலர்) பொய்யா மொழிப்புலவர் என்பதை யாதான் சொல்ல மறுப்பார்.

இவர், கிறீஸ்தவர்கள் சைவசமயத்துக்குச் செய்துவரும் இடையூற்றிற் கிடையூறாய், சுன்னாகத்திலிருந்த ஸ்ரீ முத்துக்குமாரக் கவிராயர் இயற்றிய 'ஞானக்கும்மி' என்னும் நூலைப்பரிசோதித்தும், 'சுப்பிரபோதம்" "சைவதூஷண பரிகாரம்" என்னும் நூல்களைத்தாமே யியற்றி வெளிப்படுத்தியும் வாய்ப்பூட்டிட்டு, பலருக்குத் தமிழ்க்கல்வி யறிவூட்டி அவர்களையும் ஆசிரியர் முதலிய நல்வழிகளிலுய்த்தனர்.

பின், காலயுக்தி ஹூ ஆனி மீ (June 1858) திரும்பவும் திருவாவடுதுறை முதலிய தலங்களைத் தரிசித்து, சென்னையை யடைந்திருக்க, அக்காலத்தே, புலமையும் பிரபுத்துவமும் ஔதாரிய சீலமும் ஒருங்குடைய, இராமநாதபுரம் பொன்னுச்சாமித் தேவர் கேள்விப்

படி, திருக்குறள் பரிமேலழகர் உரையையும் திருக்கோவையாருரையையும், தருக்க சங்கிரகம் அன்னம்பட்டீயத்தையும் அச்சேற்றி வெளிப்படுத்தினர்.

நாவலர் தமிழ் நாடெங்கும் புகழொளி பரப்பி, வெகுகாலமாகக் காணவேண்டுமென்று விரும்பிய திருவண்ணமலையாதீனத்து ஆறுமுகத்தேசிகருக்குக் காக்ஷி கொடுத்து, இலக்கியம் இலக்கணம் சித்தாந்தம் என்பவற்றில் திறமையைக்காட்டி, ஞாபக சின்னமாக இட்ட ருத்திராட்சமாலையையுங் கழுத்திற்றாங்கி, அங்கிருந்து புறப்பட்டுச்சிதம்பரதரிசனஞ் செய்துகொண்டு, திருவாவடுதுறையாதீனத்தை யடைந்து, அங்கே அவர்களுக்கு இலக்கியம் இலக்கணம் சித்தாந்தம் என்பவற்றில் ஏற்பட்ட முட்டுக்களை யறுத்து, அவர்கள் சிலகாலம் அங்கேயேயிருக்கும்படி கேட்டதற்கு, தாம் கருதியபடி பாடசாலையை ஸ்தாபித்தலும், பிரசங்கங்கள் செய்வதுமாகிய மக்களின் அறிவு முன்னேற்றத்துக்கான செயல்கள் எல்லாம் நடைபெறாது போய்விடும் என்ற எண்ணத்தினுல் அங்கேயிருக்க மறுத்து யாழ்ப்பாணம் திரும்பினர்.

பின்னும் ருதிரோற்காரி ஆ மார்கழி மீ (Decr 1863) சென்னைக்குப் புறப்பட்டு, அக்காலம் அர்த்தோதய காலமானபடியால் இராமேசுவரஞ் சென்று வணங்கி, இராமநாதபுரம் போய் அங்கே விசுவலிங்கத் தம்பிரானின் வேண்டுகோளின்படி மடத்திலிருந்தார். அங்ஙனமிருக்கும்போது அவ்வூரிலுள்ள பொன்னுச்சாமித் தேவர் தன்னை வந்து காணும்படி ஓர் வித்துவானையனுப்ப, அதற்கு நாவலர், சில வருஷங்களுக்குமுன் சென்னையில் தமக்கும் அவருக்கும் ஏற்பட்ட மனஸ்தாபத்தினுல் முடியாதென மறுத்துவிட்டார். பின் பொன்னுச்சாமித் தேவர், தான் நாவலருடன் பகைக்கின் தனக்கே கேடு என்று எண்ணி மன்னிப்புக் கவிபாடியனுப்ப அது கண்ட நாவலர் இனிப் போகாது விடுதல் தகாதென நினைத்துச் சென்றனர். சென்று, கல்விசம் பந்தமான பல பேச்சுகளையும் பேசி, பின் தேவர் வேண்டுகோளின்படி, "சைவசமயமேசமயம்" என்றதனைப்பீடிகையாகக் கொண்டு, பெரியதோர் அவைக்கண் பிரசங்கிக்க, அதைக் கண்ட தேவர் பேருவகை பூத்துச் சம்மானம்வழங்க, மறுக்கமுடியா

மையினால் அதையும் பெற்று, மறுநாள் திருவுத்தரகோசமங்கைக் குச் சென்று தரிசனை செய்துகொண்டு மதுரையை யடைந்து அங்கே திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனத்துப்பண்டார சந் நிதிகளின் வாக்கைமேற் கொண்டு, மீனாக்ஷியம்மை சந்நிதியிலே அத்தலத்தினதும் அங்கு எழுந்தருளியிருக்கும் சொக்கலிங்கசுவாமி யினதும் பெருமையையிட்டுப் பிரசங்கித்து, மடத்துக்குச்சென்று அங்கேயும் பிரசங்கஞ்செய்து, பின் திருப்பெருந்துறைக்குப் போய் அவ்விடத்தில், இராமநாதபுரம் இராமசாமிப்பிள்ளைக்கும், வன்றொண் டச் செட்டியாருக்கும் முறையே திருவிளையாடற்புராணம் நன்னூல் விருத்தியுரைகளிலுள்ள சந்தேகங்களைத்தீர்த்து, கும்பகோணஞ் சென்று பெரும்புகழ்படைத்த மகாவித்துவானாகிய மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களால் அழைக்கப்பட்டு அவருடன் அங்கேயுள்ள ஆதீ னத்துக்குச் சென்று பிரசங்கங்கள்செய்து பின் சிதம்பரம்போய் சட் டடமொன்று சமைத்து, இரத்தாட்சி ஞு ஐப்பசி மீ 26-ந் உ அன்று நல்ல சுபஇலக்கினத்திலே, "சிதம்பரம் சைவப் பிரகாசவித் தியாசாலை" என்ற பெயருடன் ஓர் பாடசாலையை ஸ்தாபித்தனர்.

பின் அங்கிருந்து புறப்பட்டுச் சென்னையையடைந்து பொன் னுச்சாமித் தேவர் வேண்டுகோளின்படி சேது புராணத்தையும், திருவாவடுதுறை மகா சந்நிதியின்கட்டளைப்படி இலக்கணவிளக்கச் சூறாவளி, தொல் காப்பியச் சூத்திரவிருத்தி, இலக்கணக் கொத்து என்னும் நூல்களைப்பரிசோதித்து வெளிப்படுத்தினர்.

பின் யாழ்ப்பாணத்தில் பல பிரசங்கங்களும் செய்து தமது பாடசாலையைப் பரிபாலித்துக்கொண்டு வருங்காலத்திலே, பாதிரி கள் கிறீஸ்தவ வித்தியாசாலைகளிலே ஆங்கிலம் கற்கச்செல்லும் சைவப்பிள்ளைகளின் நெற்றியிலிருக்கும் விபூதியை அழிக்கும்படி துன்பு செய்வதைக்கண்டு, பிரஜோற்பத்தி ஞு தை மீ (Jany 1872) வண்ணார்பண்ணையில் சைவ ஆங்கில வித்தியாசாலையொன்றை ஸ்தாபித்துப் பேருதவிசெய்து, ஊர் தோறும் சைவப்பாடசாலை களை அமைத்து, கீரிமலையில் போர்த்துக்கீசரால் உடைக்கப்பட்ட சிவன் கோவிலைக்கட்டுவிப்பதற்காக, "கீரிமலைச் சிவன்கோவி

எனப் பெயருடன் பத்திரிகை வெளிப்படுத்தி, எண்ணியபடியே ஷை ஆலயத்திருப்பணியை முற்றுவித்து, தர்மசீலராய் விளங்கினர்.

வெகுதானிய ௵ திரு ஞானசம்பந்தசுவாமிகள் சிவபதமடைந்த திருநக்ஷத்திரமாகிய வைகாசி மூல நக்ஷத்திரத்திலே பெரிய ஜன சமூகத்திலே செய்த பிரசங்கமுடிவில், "பாதிரிகள், என் பின் சைவசமயம் ஒளிகுன்றுமென்றவாறு ஆகவிடாது, நான் இருக்கும் போதே ஒரு சைவசமயப் பிரசாரகரைத் தேடிக்கொள்ளுங்கள். இதுவே நான் உங்களுக்குச் செய்யும் கடைசிப் பிரசங்கமாகும்" எனக் கூறிமுடித்தார்.

இங்ஙனம் நாவலர் அவர்கள் கல்வியில் தேங்கித் திளைத்து, அடிக்கடி இந்தியாவுக்குச் சென்று அங்கேயுள்ள தலங்களையும் ஆதீனங்களையுமடைந்து, வித்துவான்களோடு பரிசயப்பட்டு, அவர்களின் தமிழ்க்கல்விசம்பந்தமானவும் சமயக்கல்வி சம்பந்தமானவும் ஐயங்களை யகற்றி, கேட்போர் உள்ளம் உவக்கப்பிரசங்கள் பல செய்து, சென்றவிடமெல்லாஞ் சிறப்புப்பெற்று, சுயவூரிலும் தாமெண்ணியவைகளாகிய பாடசாலை தாபித்தல், பிரசங்கஞ்செய்தல், நூல்களியற்றுதல், திருத்தி அச்சிடுதல் முதலிய இன்னோரன்ன அருட்செயல்களைச்செய்து, சமயதீக்ஷை விசேஷ தீக்ஷைகளைப்பெற்றுச் சிவபூசை வழாது நெடுங்காலம் புரிந்துவந்த நைஷ்டிகப்பிரமசாரியாய் நடேசப்பெருமானின் குஞ்சிதபாத நீழலையடைந்தனர். சுபம்! சுபம்.

# முன்னுரை.

முத்தமிழ் வாணர்தம்
வித்தக வடியிணை
சித்தமெய் மொழிகளில்
வைத்து வாழ்குவனே.

தொன்னலம் வாய்ந்த செந்தமிழ்நாடு, பண்டைநாளிலே செல்வங்கொளித்து மதமொழி வளர்ச்சிகளாற் சீருற்றோங்கியிருந்தது. பின், சில நூற்றாண்டுகள் கழிய சமணர்களால் அதன் சீருஞ் சிறப்பும் பேரும் புகழும் அழிந்து படுவதாயிற்று. ஆனால், தமிழ்க்கலை வளர்ச்சி அத்துணை அழிவுற்றதாகத் தெரியவில்லை. இந்நிலையில் சமயகுரவர்கள் நால்வருந் தோன்றி எமது சமயத்தை வளர்ப்பாராயினர். அவர்கள் சமயத்தை வளர்த்தற்காகச் செய்த கைங்கரியங்களெல்லாம் தமிழ் மொழி வளர்ச்சிக்குஞ் சாதகமாயிருந்தன.

இவ்வாறு இவர்களால் மறுபடியும் நிலைநாட்டப்பட்ட எமது சமயம், பிற்றைக்காலத்தில் சில பாதிரிகளாலும் கிறிஸ்தவர்களாலும் அவமதிக்கப்பட்டு நிலை குலையுமென்று கண்டபோது 1822-ல் சற்குருநாத சுவாமிகளாகிய ஆறுமுகநாவலர் அவர்கள் தோன்றி, பலவாற்றானும் பல செயல்கள் செய்து நம் சமயத்தைப்பலப்படுத்தியுள்ளார். இதற்காக இவர்செய்த அரும் பெருஞ் செயல்களுள் முக்கியமானவை, கேட்பார்ப் பிணிக்குந்தகையனவான நன்மொழிப் பிரசங்கங்களும் இனியனவான வசனநடை நூல்களுமே.

இவ்வசன நூல்களே நாகரீகம் வளரவளர எமது மதமும் மொழியும் அற்றுப்போகாது நிலைபெற்று நிலவுவதற்குக் காரணமாயிருப்பன. வசன நூல்கள் நாளடைவில் குறைந்து கொண்டு வருமேயானால் சமயமொழி

வளர்ச்சிகளும் வரவர அருகிக்கொண்டேவரும். ஆதலால் இவ்விதமான தௌர்ப்பாக்கிய நிலை எமக்கு வராதிருத் தற்கு வசன நூல்களே வேண்டப்படுதலால் கலாவல்லவர் களெல்லாம் யமகம் சிலேடை முதலிய பாடுவதிலும் அதற்கு வேண்டிய யாப்பிலக்கணத்துறைகளை யாராய் வதிலும் காலத்தை அவமே கழிப்பதை விடுத்து, எல்லா மக்களுக்கு முபயோகமான வசன நடையையும் அவற்றாலாய நூல்களையுமே கையாளவேண்டும். மற்றய சாதாரணமக்களும் அவ்வசன நடையையே கடைப்பிடி த்தல் வேண்டும். அவ்வசன நடையும் நாவலர் வசன நடை போன்றிருத்தலே சாலவும் நன்று.

இங்ஙனம் தலைவரும் நூல்கள் வசன நாவலர் நூல் களினியல் புகளைக்கொண்டனவாக வமைதல்நன்றாகலின், அவர் வசன நடை தமிழ் மக்களெல்லோராலும் அறியப் படவேண்டியதாயிருக்கின்றது. ஆதலால் அவர் வசன நடையின் நயத்தை ஒருவாறு எடுத்துக்காட்டப் புகுந்து, “நாவலர் வசன நடை” என்ற தலை நாமத்துடன் இக் கட்டுரையை வரைந்துள்ளேம்.

இதனை இலகுவாகக் கிரகித்துணரும் பொருட்டு, 1. வசன நடையுற்பத்தி, 2. (நாவலர் வசனத்) தூய்மை, 3. பொருணயம், 4. முடிவுரையென நான்கு பிரிவுகளாக வகுத்து உட்பிரிவுகள் சிலவும் புகுத்தி, தெள்ளுற்ற தமிழ் வசன நடையில் எழுதியமைத்துள்ளேம். இஃதன்றியும், நாவலரவர்கள் வசன நடைச் சிறப்பை யாராயப்புகுவோர்க்கு அவர்களுடைய சரித்திரவுணர்ச் சியும் பெரும் பயனளிக்குமெனக் கருதி, அதனையும் சுருக் கமாக இந்நாலில் முதற் கட்சேர்த்துள்ளேம்.

சுபம்! சுபம்!!

இங்ஙனம்,

க. சோ. ரா. சர்மா.

# நாவலர் வசன நடை.

**பை**ந்தமிழ்ப் பாவையின் நறுமணம் வீசும் தகைமை சால் யாழ்ப்பாணத்து, ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் வசன நடையைப் பற்றி எழுதப் புகுந்தயான், அவர் காலத்துக்கு முன்பு வசன நடையானது இருந்த வரலாற்றைப்பற்றிக் கூறுதல் மிகையாகாதாதலின், அதனையீண்டு சுருக்கிக் குறிப்பிடுகின்றேம்.

## உரை நடையின்உற்பத்தி.

வசன நடையாவது, மக்கள் தம் மனக்கண் எழுகின்ற அபிப்பிராயங்களை, யாப்பிலக்கண வரையறையின்றி, எழுத்துக்களாலாய சொற்களைக்கோவைப்படுத்தி, பொருள் விளங்குமாறு வரிவடிவாக வெழுதியமைத்தலாம்.

இவ்வமைதியை உரை நடையென்றலும் பொருந்தும். உரை நடையானது பாட்டுக்களினிடையே விரவி, அவற்றின் தொடர்பினை விளக்குதற்கும், பாட்டுக்களுக்குப் பொருள் எழுதுவதற்கும், நகைச்சுவை மிக்க கதைகளை எழுதுவதற்கும், அகப்பொருள் புறப்பொருள்களின் தொடர்புடைய கட்டுரை வரைதற்கும் பயன்பட்டு வந்தது. இதை விளக்கியே இலக்கண விளக்கப்பாட்டியலுடையார்,

"பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்
றுரைவகை நடையே நான்கென மொழிப" என்றார்.

இவ்வசன நடையானது, தமிழில் இடைக்காலத்து உரையாசிரியர்களால் நூலுரைகளிற் பயிலப்பட்டு வந்தது. நக்கீரர் செய்த இறையனாரகப் பொருளுரையும், அடியார்க்கு

நல்லார் எழுதிய சிலப்பதிகாரவுரையும், இளம் பூரணர் செய்த தொல்காப்பியவுரையும், நச்சினார்க்கினியர் செய்த தொல்காப்பியவுரை பத்துப்பாட்டுச் சிந்தாமணியுரைகளு மேபழையன.

வசன நடையை உரை நடையென்றலும் வழக்காறுத லின், உரையிடையிட்ட பாட்டுச் செய்யுள்களாகிய பெருந் தேவனார் பாரதம், சிலப்பதிகாரம் என்ற நூல்களில் உரை நடை காணப்படுகின்றது. வடமொழியின் கண்ணேகத்திய காவியங்களிருத்தல் போல, தமிழ் மொழியின் கண்ணே வசன காவியங்கள் காண்டலரிது. ஸ்ரீ புராணம், கத்திய சிந்தாமணி முதலிய சைன நூல்கள் வசன நடையானவையே. இவ்வாறு இரண்டொரு வசன நூல்கள் சைனர்களாற் செய் யப்பட்டனவே யன்றி மற்றையோர்களால் அது பெரிதும் பயிலப்படவில்லை. சிலர் உரை நடையையும் ஒருவகைச் செய்யுட்களாகக் கருதிச்சூத்திரஞ்செய்தனர். உதாரணமாக,

"ஒப்பொடு புணர்ந்த வுவமத் தானும்
தோன்றுவது கிளந்த துணிவி னானு
மென்றிரு வகைத்தே பிசிவரு நிலையே"

என்றதனைக்காண்க.

இவ்வாறு, வசன நடையும், ஒருவகைச் செய்யுணடை யாகப் பாவிக்கப்பட்டு வந்தால் அதற்குரிய தனித்தியங்கும் நிலைமையற்றுக் கட்டுப்பாடுடையதாகி விடுகின்றது. இது மிக வும் பரிதபிக்கத்தகுந்ததோர் விஷயமாகும்.

பிற்றைக் காலத்துப் போந்த வீரமாமுனிவர், 'வேதிய ரொழுக்கம்,' 'அவிவேக பூரண குரு கதை,' என்ற நூல்க ளியற்றினர். இதற்கிடையில் திருவாவடுதுறை யாதீனத்தா ரால் கண்டன நூல்கள் பல இயற்றப்பட்டு வெளிப்போந் தன. கி. பி. 17-ம் நூற்றாண்டின் தொடக்க முதல் தமிழில் வசன நடை விசேஷமாய் வழங்கப்படுவதாயிற்று. அதன் மேல் இக்காலத்தில், திருத்தணிகைச் சரவணப் பெருமாள் ஐயர், யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

அவர்கள் முதலிய வித்துவான்கள், வசன நடையையே போற்றி, அதன்கட்பலநூல்களை வெளியிட்டனர். இவ்வாறு வெளியிடப்பட்ட நூல்களுள், நாவலர் நூல்களே, கௌரவமுஞ் சிறப்பும் பொருந்தி, தூய்மையுடையனவாய், மக்களின் வாழ்க்கை நலனுக்கு இன்றியமையாதனவாயிருக்கின்றனவெனத் தமிழ் வாணர் மெச்சுகின்றனர். ஆதலின் அவர் வசன நடையைப்பற்றி யெழுதுதல் ஆவசியகமேயாகும்.

தமிழ் மணங்கமழும் தகைமைசால் யாழ்ப்பாணத்தின் கண்ணே, செந்தமிழ்த்திலகமாய்த் தோன்றியருளிய ஆறுமுக நாவலர் பெருமான், தம் வாணுள் முழுதையும் கல்விச் செல்வியின் வளர்ச்சியின் பொருட்டுக் கழித்து வந்தனர். நாவலர் அவர்களின் சித்தமுஞ் செயலும் செந்தமிழ் நாட்டின் செம்மையை நாடிநின்றது. இதுவுண்மையென்று சான்று பகர அவரியற்றிய நூல்கள் பல விளங்குகின்றன.

பண்டைநாளில், புலவர் பலர் இயற்கையிலிலங்கும் அழகினைக்கண்டு கழிபேருவகையுற்று, தாம்பெற்ற இன்பத்தை ஏனைய மக்களும் பெற்றின் புறுமாறு, அழகிய செஞ்சொற்களா லெழுதியமைத்தார். இவ்வமைப் பெல்லாஞ் சிருடைப் பாக்களாலமைந்த வாதலின், அவை, கற்றோர்க்கன்றி மற்றையோர்க்குப் பெரிதும் பயனளிப்பதில்லை. இளம்பூரணர் நச்சினார்க்கினியர் முதலியோர் செய்த உரை நடைகள், நூலுரைகளாகவும், கடினமானவைகளாகவு மிருந்ததனால், அவையும் போதியளவு பயன்றரவில்லை. இவ்வுண்மைகளைத் தம்மறிவினாற் கண்டுகொண்ட நாவலர் பெருமான், சிறப்புறக் கற்றவர்க்கன்றி, பொதுப்படக் கற்றவர்க்கும் உபயோகமாவன, இலகுவான வசன நூல்களே யென்றுள்ளத் துணர்ந்துகொண்டார். அதுவன்றியும், கற்கும் மாணவர்க்குக் கருவிநூல் சமயநூலுணர்ச்சிகளை யூட்டத்தக்க புஸ்தகங்களில்லா திருத்தலையும், இருந்த புஸ்தகங்கள் சிலவும் எழுத்துப்பிழை சொற்பிழை வசனப்பிழை முதலிய பொதிந்தனவாய்க் காணப்படுதலையுங் கண்டுகொண்டார். கண்டு, அச்சிலும் ஏட்டுப்பிரதியிலுமுள்ள பலநூல்களைப் பரிசோ

தித்துத் திருத்துவதோடு நில்லாது, பல வசன நூல்களையுஞ் செய்து மாணவர்க்கும் பிறர்க்கும் பயன் பெரிதுஞ்சித்திக் கப்பண்ணினர். இவர் செய்த நூல்களே தற்காலத்தமிழுலகுக்கு உணர்ச்சியையுண்டுபண்ணுஞ்சாதனங் களாயுமிருக்கின்றன. இவைகள் ஆழ்ந்த கருத்தினையும் மேலானபோக்கையுங் கொண்டு சர்வசாதாரணமாகப்பயிலப்பட்டுத்தமிழ் நாட்டில், தனிப் பெரும் பெயர்பெற்று விளங்குகின்றன வெனச்சான்றோர் பலர்சாற்றுகின்றனர்.

இங்ஙனம் இவர்கள் கூறுதற்குக் காரணமாயுள்ளவை எவையென ஆராயப் போந்தவிடத்து, அவர் நூல்கட் கணுள்ள வசனங்களின் துன்றிய தூய்மையும், செய்ய பொருணயமுமேயென்பது வெளிப்படையாக விளங்குவதாயிற்று. ஆதலின் அவர் வசனத்தூய்மையைப் பற்றி ஒருவாற்றான் ஆராய்ந்தபடி கூறுவாம்.

நாவலர் அவர்கள் எழுதியுள்ள தெள்ளூற்ற தமிழ் வசனங்களெல்லாம், அவற்றிற்குரிய இலக்கணங்களை யொருசேரப்பெற்று, இயற்கைவனப் பெய்திய பெண்ணொருத்தி காமுகரான ஆடவர் கருத்தினைக் கவர்ந்தாங்குபோல, கருத்துறக்கற்ற கலைஞானவல்லரின் இருதயத்தை யிழுப்பனவாயிருக்கின்றன. இதற்குச் சான்றுகள் பின்னோரிடத்துக் கூறுவாம். நாவலர் அவர்களுக்கு, சொற்களை வலிந்துகோடும் பழக்கமும், சொற்களுக்கேற்பப் பொருள்களைத் திருப்பிக் கொள்ளும் வழக்கமுமில்லை. வசனங்களை வலிந்து கொள்ளாது இயல்பாக எழுகின்ற வசனங்களையே வரிவடிவிலாண்டு வரும் சுபாவம் அவற்கிருந்தது. பொருட் பேறுகருதிச் சொற்களை எடுத்தாள்வதேயன்றி சொல்வனப்புக்காகப் பொருள்களை யெடுத்துக்கொள்ளுதல் அப்பொருள்களின் உயர்தனிப் பெருமையை மட்டுப்படுத்துமென்பதே அவர் உள்ளக்கிடக்கை.

இங்ஙனம் நாவலர் அவர்கள், அறிஞருள்ளத்துவகை பூப்பச்சித்திரித்த செஞ் சொற்றமிழ் வசனங்களிடத்தே, எழுத்துப்பிழை சொற்பிழை வசனப்பிழை முதலிய வின்றி,

குறைந்த கல்வியுடையாரும் எளிதில் வாசித்து விளங்குதற் பொருட்டு, சொற்கள் பிரிக்கப்பட்டுச் சந்திவிக்கிரகங்க ளின்றி இருக்கின்ற வகையும், குறியீடுகள் இடப்படவேண் டிய விடங்களில் இடப்பட்டிருந்த வகையும் மிக்க தூய்மை யாகவே யிருக்கின்றது. வி. கோ. பரிதிமாற்கலைஞனும், தமது, 'தமிழ் மொழி வரலாறு' என்னும் நூலின் கண் ணே, குறியீட்டி லக்கணத்தைப் பற்றிக் கூறிய விடத்து,

"ஆங்கிலம் முதலிய பிற பாஷைகளிலே மிகவும் பிரயோசனமுள்ளதாகக் காணப்படுகின்ற குறியீட்டி லக்கணம் தமிழின்கண் முழுதுந்தழுவிக் கொள்ளப் படுதல் வேண்டும். அதனல் பொருட்டெளிவும் விரை வுணர்ச்சியு முண்டாகின்றன. இவைகாரணமாகப் படித் தானுக்குப் படித்தநூலின் கண் ஆர்வமுண்டாகின் றது. இக்குறியீட்டிலக்கண மெல்லாம், வசன நடை கைவந்த வல்லாளராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவல ரவர்களானே முன்னரே மேற்கொண்டு வழங்கப்பட் டுள" என்றுகூறியது இவ்வுண்மையை விளக்குகின்றது.

எனவே, நாவலர் காலத்துக்கு முன்னர், குறியீட்டிலக் கணங்கள் முழுதும் தமிழ் வசனங்களிலே செவ்வனே அமைவு பெறுதிருந்தன வென்பது புலனுயிற்று. இதற்குச் சான்றுக, இராசேந்திரசோழன் காலத்துச் சிலாசாசன மொன்றில்.

"இந்நாட்டுச் செம்புறை கண்டத்து சிறுசெம் புறை அளந்தபடி நிலம் ஆறரையே மும்மாவரை முந் திரிகைக்கீழ் அரையே நான்குமா முக்காணி அரைக் காணி முந்திரிகையிலும் ஊரிருக்கையும் கொட்டகார மும் மாதேவரிருந்ததிடலும் கண்ணன் வாய் நின்றும் இவ்வூர் நிலத்தாரே குறங்கறுத்துப் புறவூர்க்கு நீர் பாயும் வாய்க்காலும் வெள்ளான் சுடுகாடும் கண்மான சேரியும் பறைச்சேரியும் பறைச்சுடுகாடும் ஆக இறை யிலி நீங்கு நிலம் ஏழு மாகாணிக்கீழ் ஏழு மாவரைக் காணி முந்திரிகைக்கீழ் நான்குமாநீக்கி நிலம் ஆறே

அறுமாகாணி முந்திரிகைக்கீழ் மூக்காலே ஒருமாவினுல் இறைகட்டின காணிக்கடன்..............." எனவரையப் பட்டிருந்த வசனத்தில் குறியீட்டிலக்கணங்கள் வேண்டியபடி அமைவு படாதிருந்த வாற்றைக்காண்க.

இனி, நாவலர் வசனங்கள் ஒன்ருேடொன்று தொடர் புடையனவாய் வீண் சொற்களும் வீண் அடைகளுமின்றித் தார்க்கிக ரீதியுடன் கூடி, செம்பொருள் கான்று, தெளிவான முறையிலமைந்திருக்கின்றன. இவர் வசனங்களில் தமிழ்ப் பாஷையின் அநந்நியமாகிய வடசொற்களேயன்றி, ஏனைய திசைச்சொற்கள் காணப்படாவாயின. அவ்வட சொற்களைத் தாமும் நாவலர் அவர்கள் பிரயோகிக்கும் அளவும் அழகும் மிக்க புனிதமாகவேயிருக்கும். இராச்சியங்கள் மாறுபட்ட காரணமாகவந்த, 'சலாம்; 'சபாஸ்' என்னும் திசைமொழிகள் தமிழிலக்கியங்களினு மேறிவிட்டன. அருணகிரிநாதர் தமது திருப்புகழில்,

"சுராதிப திமாலய னுமாலொடு சலாமிடு
சுவாமி மலை வாழும் பெருமாளே" என்றும்
"கற்பகந்திரு நாடுயர் வாழ்வுற
சித்தர் விஞ்சையர் மாகர் சபாசென
கட்டவெங்கொடு சூர்கிளை வேரற விடும் வேலா"

என்றும், கூறியதைக்காண்க.

குமரகுருபரசுவாமிகளும், தமது மீனுக்ஷிபிள்ளைத் தமிழ் என்னும் நூலின்கண்.

"குறவர் மகட்குச் சலாமிடற் கேக்கறு
குமரனை முத்துக் குமரனைப் போற்றுதும்"

என்றருளிப் போந்தார்.

இங்ஙனம் இவர்களிலக்கியங்களில் திசைச்சொற்கள் திகழ்ந்தனவாகவும், இவர்காலத்துக்கு எத்தனையோ பல

ஆண்டுகளுக்குப் பின்னிருந்த நாவலர் அவர்களின் கத்தியங்களில் இத்திசைச் சொற்கள் இடம் பெறுமை வியப்பேயாகும்.

நாவலர் அவர்கள், இத்திசைச் சொற்களைப் பெரிதும் வழங்காதிருந்தமை, இவை ஒன்றிரண்டாயப் பலவாய் மலிந்து, தனித்தமிழ் மொழியின் தொன்னலம் மங்கி, நாளடைவில் புதுவதோர் பாஷையாக மாறிவிடுமென்ற ஐயப்பாட்டினாற்போலும். இவரையும் இவர் வசன நடையையும் புகழும் அறிஞராயுள்ளார் பலர், இத்திசை மொழிகள் தமிழ்ப் பாஷையில் விரவுதல் நன்றென்றும், அதனால் நந் தமிழ்ப் பாஷை, பாஷைவளன் நிறைந்த பாஷைகளுளொன்ருக ஆகுமென்றும் நவிலுகின்றனர். இவ்வாறு திசைமொழிகள், நம் மொழியிற் கலப்பதைப் பற்றிய முடிபுகள், அறிஞருள்ளத்துப் பலவாக விராது ஒரேவகையாக விருத்தலே சாலும். இது எப்படியாயினுஞ் சரியே.

இனி, இவர் வசனங்களில் பொச்சாப்புக்காரணமாகவும் சோம்பல் காரணமாகவும் காலச்சுருக்கமும் முயற்சிச் சுருக்கமுங் கருதி வழங்கிவரும், 'ஆச்சு', 'இருக்குது' முதலிய மரூஉச்சொற்கள் காணப்படாதிருத்தலும் மிக்க சோபிதமாகவேயிருக்கின்றது.

இனி, பண்டிதர்கள் தாமெழுதும் வசனங்களிலே, ஓசையின்பங் கருதியும் யாப்பு நேர்மை நாடியும் வேண்டாத அளபெடைகளை வீணாகவழங்கிவருதல் போல, நாவலர் அவர்கள், தாமெழுதும் வசனங்களிலே, இவ்வளபெடைகளைக் கையாளாதிருந்தது, போற்றத்தக்கதாகவேயிருக்கின்றது. தமிழ் வரலாறுடையாரும்.

"அளபெடைகளை வீணாக வழங்குதல் கூடாது. அளபெடைகள் யாப்பு நேர்மையாகவே வகுக்கப் பட்டன. வசன நடையில் யாப்பு நேர்மையேது. இல்லை. ஆனால் சில பண்டிதர்கள் எழுதும் வசன நடை செய்யுணடையையொட்டியே நடத்தலால், அவர் ஓசையின்பங்கருதி

வழங்குவாராயினர். இவ்வளபெடை வழக்குப்பொருட் டெளிவு கருதினல் நீக்க வேண்டும்'' எனக் கூறியதை

யுங்காண்க. அன்றியும், அளபெடைகள் யாப்பு நேர்மை யாகவே வகுக்கப்பட்டனவென்பது,

"இசைகெடின் மொழிமுத லிடைகடைநிலை நெடில்
அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே'' என்றும்,
"ஙஞண நமன வய ளல வாய்தம்
அளபாங் குறிலிணை குறிற்கீ ழிடைகடை
மிகலே யவற்றின் குறியாம் வேறே'' என்றும்,

பவணந்தியார் கூறிப்போந்த வாற்ருல்அறியக்கிடக்கின்றது

இனி, போலிப்புலவர் சிலர் வடமொழியின் இயல்பு அறியாமையினுல், 'ழ'கர, 'ள'கரபேதங்களையறியாது, சொற்களைப் பிழைப்படுத்தி வழங்கிவந்தார்கள். எழுதிய வன் ஏட்டைக்கெடுத்தான்; படித்தவன் பாட்டைக்கெடுத் தான். என்றவாறுபோல, ஏடுகள் எழுதுவாரும் தமிழின் உண்மையான சொரூபத்தையறியாது, பரிதியைப் பருதி யென்றும், சிவப்பைச் சிகப்பென்றும், கொத்துமல்லியைக் கொத்தமல்லியென்றும், அரிணத்தை அருணமென்றும், அருணத்தை அரிணமென்றும், கர்ப்பூரத்தைக் கற்பூர மென்றும், குங்குலியத்தைக் குங்கிலியமென்றும், கத்தரிக் காயைக் கத்திரிக்காயென்றும், தொடையைத் துடையென் றும், உத்தராயணத்தை உத்தராயனமென்றும் இப்படியே அநேக பிழைகளை யுண்டாக்கி விட்டார்கள். இத்தகைய பிழைகள் இவர் நூல்களிலே காணப்படாதிருப்பதுடன் இவர் சம்பந்தப்பட்டு அச்சியற்றப்பட்ட எந்த நூல்களிலே யுங் காணப்படாதிருக்கின்றன.

இனி, நாடகத்தமிழே நவரசங்களையும் இயல்பாக ஈவ னவாகவும் அவைகளையெல்லாம் நாவலர் அவர்கள் அறிவின் வன்மையானே தம் வசனங்களில் அமைய வசனங்களை யெழுதிக்கொண்டு போகும் பாங்கு, நாடகத்தமிழ் வல்லா ருக்கும் பிறர்க்கும் இரச ஞானவின்பத்தைக் கொடுப்பதாக வேயிருக்கின்றது.

இனி, நாவலர் அவர்கள் அதிவியாப்தி அவ்வியாப்தி முதலிய தோஷமின்றித் தார்க்கிகரீதியுடன் வசனங்களை யெழுதியமைத்தாராதலின், சில விடங்களில் கடுஞ் சொற் களும் கடும்வசனங்களுங் காணப்படுகின்றன; அக்கடுஞ் சொற்களும் கடும்வசனங்களுமே யன்றி, வேறெந்த இலகு வான சொற்களோ வசனங்களோ அவ்விடங்களில் நேர் பொருளைத் தராதிருத்தலே அதன் காரணமாகும். இவ் வுண்மையை அவர் நூல்களில் ஆங்காங்கு கண்டு தெளிந்து கொள்க.

அன்றியும், நாவலர் அவர்கள் மாணவர்க்காகச்செய்த நூல்களையும் பிறவற்றையும் முறையாகக் கற்றவர்க்கு, அவர் நூல்களிற் காணப்படும் கடினமான எப்பகுதிகளும் இலகுவானவையாகவே தோன்றும். இதைத்தத்த மனுப வத்தானன்றி வேறெவ்வாற்ருனும் அறிதல் ஆகாது.

இனி, நாவலர் அவர்களின் மொழிபெயர்ப்பு நூல்களை, அவற்றிற்குரிய செய்யுணூல்களோடு ஒப்பவைத்து ஆய்ந்து பார்க்கின், சுருக்கமானதும் விளக்கமானதும் செய்யுள்களின் பதங்களுக்கு நேர் பொருளைத் தரத்தக்கதுமான சொற் களையே பெரிதும் வழங்கி வசனமாக மொழி பெயர்த்திருக் குஞ் செம்மை புலனிற்படுவதாகும். உ-ம்.

“வேதாகம புராணமே மிருதியே முதலா
வோது நூல்களின்றுணி பொருளுலகெலாம் பயந்த
பேதை பாகனே பரமெனத் தேர்ந்துணர் பெரிய
போத மாதவ.............................” என்ற

செய்யுளுக்கு மொழி பெயர்ப்பாக,

“அநாதி முத்த சித்துருவாகிய முதற்கடவுள் சிவபிரான் என்பதே வேதம் ஆகமம் மிருதிபுராணம் முதலிய நூல் களினது துணிபொருளென்று தெளிந்துணர்ந்த முனி வரே.......................” என,

பண்புடைப் பொருள்தரும் வழியில் அன்னுவயித்து எழு தியமைத்தவளனை நோக்குக.

"நாத வேதாந்தப் புலங்கடந்த பேரொளி" என்றதனுக்கு, கலைஞானங்களை விளக்குமறிவையும், வைகாரியாதி வாக்குக்கள் நான்கின் மேற்ற தாம் தற்போதத்தையுங் கடந்து நிற்றல் எனச்சிலர் கருத்துக்கொண்டிருக்கவும், நாவலர் அவர்கள், அக்கருத்தையே தெளிவாகவும் நேராகவும் சுருக்கமாகவும் விளங்கக்கூடியதாயிருக்கும்படி "பரமசிவன்" என்று குறிப்பிட்ட நுண்ணறிவைப் பேரருள் ஞானிகள் யார் தான் போற்றுதுவிடுவர்.

இதுகாறும் இங்கே கூறிய நாவலர் வசனத்தின் தூய நல்லிலக்கணங்களெல்லாம், அவரது ஒவ்வொரு நூலினும் ஒவ்வொருவசனத்தும் அமைந்திருக்கின்றன. இவற்றைத் தனித் தனியே நாவலர் வசனத்துச் சமன்னுவயஞ் செய்து காண்பிப்பதென்றால், குறித்ததாள்கள் இடந்தராவாதலின் அவரது ஒரு வசனத்தை மாத்திரம் ஈண்டு குறிப்பிட்டு இப்பகுதியை முடிக்கின்றேன்.

"சுத்த சாட்குண்ணிய பரிபூரணராகிய பரமபதி சிவபெருமானே என்று துணிந்தவர்களாய், கொலை, களவு, கள்ளுணல், புலாலுணல், பிறன் மனை விழைதல், பொய்ச்சான்றுரைத்தல் முதலிய பாவங்கள் இல்லாதவர்களாய், இரக்கம், வாய்மை, கொடை முதலிய புண்ணியங்களை உடையவர்களாய்,குருலக்கணங் குறைவற அமைந்த சைவாசாரியரை அடைந்து சிவதீக்ஷை பெற்றுக்கொண்டவர்களாய், விபூதி ருத்திராக்ஷ தாரணம், சந்தியாவந்தனம், ஸ்ரீ பஞ்சாக்ஷரஜபம், சிவத்தியானம், சிவாலய சேவை, சிவலிங்கபூசை, குருவாக்கிய பரிபாலனம், மாகேசுரபூசை முதலியனவற்றைச் சிவாகமவிதிப்படி மெய்யன்போடு செய்பவர்களாய் உள்ளவர்களே சைவர்களென்று சொல்லப்படுவார்கள்."

என்ற நாவலர் அவர்கள் வசனத்தே, மேலே கூறிய உண்மைகள் ஒவ்வொன்றையும் எடுத்து ஒப்பிட்டு இதன் செவ்வியை நோக்குக.

## பொருணயம்.

அழகிய உடலினை, உயரிய உயிரானது ஓவாது இயங்கச் செய்யுமாறுபோல, நாவலர் அவர்களின் தூய வசனங்களை, பொருள் விசேஷங்கள் கௌரவப்படுத்துகின்றன. ஆதலின், அவற்றை ஈண்டு எடுத்தாராய்வாம்.

*பாலபாடங்கள்:*—நாவலர் அவர்கள், தமது பாடசாலையிலே கற்கும் மாணவருக்காக வியற்றியுள்ள பாலபாடங்கள் சாலவுஞ் சிறந்தவை. இவை, எம்மக்களுக்கும் எச்சமயத்தார்க்கும் வேண்டப்படும் நீதி நெறிகளை நன்குவிளக்குவனவாய் இன்னிய சுவையுடையவசனங்களாயமைந்து கற்பதற்குரியதாயிருக்கின்றன. எவ்வாறு வடமொழிபயிலுஞ் சிறார்க்கு, காளிதாசப் புலவராலியற்றப்பட்ட இரகுவம்சம், குமாரசம்பவம், மேகதூதமென்னுங் காவியங்கள் பயில்தொறும் பயில்தொறும் பாகுபோற்சுவை யருளி அறிவளித்துக் கற்பதற்கின்றி யமையாதனவாயிருக்கின்றனவோ அவ்வாறே இவரியற்றிய பாலபாடங்கள் தமிழ் பயிலும் மாணவர்க்கு இனிமையை யூட்டவும் அறிவினைக் கொடுக்கவும் வேண்டப்படுவனவாயிருக்கின்றன. மாணவர்கள் முறைமுறையாக எவ்வெவற்றையறிய வேண்டுமோ, அவ்வவற்றை ஒழுங்கின்படி வைத்துப் பாடங்களை அமைத்திருக்குஞ்செயல், "பாலபாடம்" என்னும் பெயருக்குச் சிறந்ததோர் வாச்சியமாக விருக்கின்றது. இப்பாலபாடங்களே, ஆரம்பக்கல்வியுடையார்க்கு ஆவசியகமாக வேண்டப்படுவன. இவ்வுண்மையை நாவலர் அவர்கள், இராமநாதபுரம் பொன்னுச்சாமித்தேவர் உதவி பெற்றுத் திருக்கோவையாருரை முதற்பதிப்பு வெளியிட்ட காலத்திலே (ரௌத்திரி ௵ ஐப்பசி ௴ கி. பி. 1860) தம் பதிப்பிற்கனுபந்தமாக, "தமிழ்ப்புலமை" என்னுந் தலைப்போடு, தமிழ் நூல்களைக் கற்கு மொழுங்கினை வசன நடையிலெழுதிப் பதிப்பித்தனர். அதில் முதற்கண்,

"தமிழ் கற்கப்புகுஞ் சைவசமயிகள் முன்னர்ப்பால பாடங்களைப்படித்துக்கொண்டு பின் இலக்கணச் சுருக்

கத்தைக் கற்றறிந்து, இயன்றளவு பிழையில்லாமல் எழுதவும் பேசவும் பழகுக." என்று கூறியதனுல்,

இப்பால பாடங்களின் பெருமையை யறிக. இப்பால பாடங்களின் பிரபாவத்தை அதிகம் விரித்தல் மிகையாகு மாதலின், இதை விடுத்து, இனி அப்பிரபாவத்துக்குக் காரணமாயுள்ள செம்பொருள் நலனை ஆய்ந்தெடுத்து விளக்குவாம்.

நாவலர் அவர்கள், நாயனுர் பெருமான் திருவள்ளுவ ஞர் அருளிப்போந்த, கடுகைத்துளைத்து எழுகடலைப்புகட் டிக் குறுகத்தறித்த குறள்களின் சாரங்களைப் பெயர்த் தெடுத்து, தமது நான்காம் பாலபாடத்தின் கண்ணே ஆங் காங்கு பதித்திருக்கும் பண்பு பாராட்டத் தக்கதேயாகும்.

"ஈன்ருண் முகத்தேயு மின்னுதா லென்மற்றுச்
சான்ருேர் முகத்துக் களி" என்னும் அழகிய அடி

களின் அரும்பொருள்கள்,

"யாது செய்யினும் பொறுக்கும் மாதாவும் கள்ளுண்டு களித்தலைப் பொறுக்கமாட்டாள், ஆனபின், குற்றம் யாதும் பொருத அறிவுடையோர் எதிரே கள்ளுண்டு களித்தல் யாதாய் முடியும்" என்னும் செவ்விய வச

னத்தில் பொதிந்திருப்பதைக் காண்க. இன்னும்,

"ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ
னன்றெய்தி வாழ்வதோ ராறு" என்னும் உண்

மைப்பொருளினை,

"சூதாட்டத்தில் வென்று பெறும் பொருள் இரையென்று மீன் விழுங்கிய தூண்டின் முள்ளைப் போலச் சூதாடு வோர் நீங்காமைக்கு இட்ட ஒரு தளையாகி மற்றைத் தொழில்களையெல்லாங் கெடுத்துப் பின்பு துன்பத்தைத் தரும்" என்னும் வசனத்தில் விரித்துக்காட்டிய பெருஞ் செயலைக் காண்க.

" பெரியோரைப் பேணு தொழுகிற் பெரியாராற்
பேரா விடும்பை தரும்" என்னுஞ் சீரிய குறளுக்கு விரிவுரை செய்தவருக,

"பிதாமாதா முதலாயினேரை நிந்தித்ததவர்களும், அவர்களைப் பேணுது தள்ளிவிட்டவர்களும், பைத்தியத்தினுலும், நாக்குப் புற்றினுலும், நேத்திர ரோகத்தினுலும், காலிற் புண்ணினுலும் சர்வாங்க வாயுரோகத்தினுலும், பெருவியாதியினுலும் வருந்துவார்கள்"

எனக் கருத்துற எழுதியமைத்த அருட்செயலை நோக்குக.

" பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்விறப்பான் கண்" என்னும் நாயனுர் மொழி நலம்,

" பிறன்மனை விரும்பு வோரிடத்தே குடிபுகுவன பாவமும் பழியும் பகையும் அச்சமுமாகிய நான்குமாம்"

என்னும் வசனத்தின் கண்ணே, உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளிவாக விளங்கும் வனப்பைக் கண்டு கொள்க.

இங்ஙனம், செந்நாப்புலவரின் திவ்விய மொழிகளுக்கிணங்கப் பலவசனங்களை யெழுதி யமைத்த திருவினை, தமிழகம் போற்றத்தக்கதாகவேயிருக்கின்றது.

இன்னும், கம்பர் கவியின் கணிக்குங் கருத்துக்கள் இவர் வசனத்தில் தேங்கித்திளைத்திருப்பதை நன்கு காணலாம்.

" தீர்வரும் இன்னல் தம்மைச் செய்யினும் செய்யசிந்தைப்
பேரறிவாளர் தத்தம் செய்கையிற் பிழைப்பதுண்டோ
கார்வரை நிறுவித்தன்னைக் கனலெழக் கலக்கக் கண்டும்
ஆர்கலி அமரர் உய்ய அமுதுபண் டளித்த தன்றே"

என்னும் அழகிய கவியின் கருத்துகள்,

"கீழ்மக்கள் தம் வாயினால் வைதபொழுது மேன்மக்கள் மீட்டும் தம் வாயினால் அவரை (பெரியாரை) வைவரோ வையார்" என்றும், "தன்னை வெட்டிய குடாரத்திற்கும் தனது நறுமணத்தையே கொடுக்குஞ் சந்தன மரம் போலத் தமக்குத் தீமை செய்தவருக்கும் நன்மையே செய்வது அறிவுடையோருக்கு அழகு"

என்னும் வசனத்துள் அமைந்திருக்குஞ் சிறப்பைக் காண்க. இன்னும்,

நாவலர் அவர்கள், பதமுத்தியெய்தும் மானுடன் மனம் வாக்குக் காயங்களினால் செய்யவேண்டிய முயற்சியிது வென வலியுறுத்துபவராய்,

"கடவுளுக்குச் செய்யும் வழிபாடுகளாவன, அவரை மனசினாலே தியானித்தலும், கால்களினாலே வலம் வருதலும், தலையினாலே வணங்குதலும், செவிகளினாலே அவருடைய புகழைக் கேட்டலும், கண்களினாலே அவருடைய திருமேனியைத் தரிசித்தலுமாம்"

என்று எழுதியுள்ள செம்பொருள்காலும் வசனத்தின் மாண்மை என்னென்று தான் மெச்சுவது. இதற்குப் பிரமாணமாக,

"கண்ணுதலா லயநோக்குங் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோயில்புகுங் கால்களேகால்கள்
பெண்ணொருபா கனைப்பணியுந் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடு நன்னாவே நன்னாப்
பரன்சரிதை யேகேட்கப் படுஞ்செவியே செவிக
ளண்ணல்பொலங் கழனினைக்கு நெஞ்சமே நெஞ்ச
மவனடிக்கீ ழடிமைபுகு மடிமையே யடிமை"

என்றும்,

"ஆக்கையாற் பயனென் அரன்
கோயில் வலம்வந்து

பூக்கையாலட்டிப் போற்றியென் னுதவிவ்
வாக்கையாற் பயனென்'' என்றும்,
"மானிடப் பிறவி தானும் வருத்ததுமனவாக் காயத்
தானிடத் தைந்து மாடு மரன்பணிக்காக வன்றோ.''

என்றுங் கூறியதைக் கருத்திடைகண்டு மகிழ்ந்துகொள்க.

இன்னும், இப்பாலபாடத்தின் கண்ணே சோதிடப் பகுதி, வைத்தியப்பகுதி, சுகாதாரப்பகுதி முதலிய பல துறைகள் காணப்படுவது பெரும் பயனைத்தருவதாகவே யிருக்கின்றது.

**பெரிய புராண வசனம்:-** இன்னும், இவரியற்றிய வசன நூல்களுள் பெரிய புராண வசனமும் சிறந்த தொன்றாயிருக்கின்றது. இது, பத்திய ரூபமாக விருக்கும் பொழுது, நிகண்டு கற்று இலக்கிய வாராய்ச்சிசெய்து இலக்கண நூல்களிலே பயின்ற வித்து வான்களுக்கேயன்றி, மற்றவர்களுக்குச் சிறிதும் பயன்படாதிருத்தலைக்கண்டு, குறைந்த கல்வியுடையார் வாசித்தறிந்து கொள்ளும் படியாகவும், கல்வியில்லாத ஆடவரும் பெண்களும் பிறரைக்கொண்டு வாசிப்பித்தறிந்து கொள்ளும் பொருட்டும், ஆவசியகமான திரிசொற்களையும் வடசொற்களையும் இன்றியமையாது வேண்டப்படுமிடத்து மாத்திரஞ் சிறுகச் சேர்ந்து, பெரும்பாலும் இயற்சொற்களையே பிரயோகித்து, வாசிப்பவர்களுக்கு எளிதில் பொருள் விளங்கும்படி சந்திவிகாரங்களின்றி செம்மை சான்ற செந்தமிழ் வசன நடையில் பதிப்பித்திருக்கின்றனர்.

நாவலர் அவர்கள் இப்புராண வசன முகவுரைக்கண், இதை ஓதுகின்றவர், பதி, பசு, பாசவிலக்கணங்களையும், சரியை கிரியையோகஞ் ஞானமென்பவற்றின் இயல்புகளையும், அருட்பாக்களின் பெருமைகளையும், சிவாலய தரிசனம் மாகேசுர பூசை முதலிய வற்றின் மகிமைகளையும், சைவா சாரியர், சிவனடியாரென்பவரின் இலக்கணங்களையும், மாபாதகங்களினால் வருந் துன்பினையும், புராணம் ஓதல் கேட்டல்

என்பவற்றின் முறைகளையுமறியும்படி சுருக்கிவிளக்கிக் கூறியிருக்கின்றனர். இங்ஙனம் சங்கிரகமுறையானே விளங்கவைக்குஞ் சாதுர்யம், வள்ளுவனாரோடு ஒப்பிடக் கூடியதாக விருப்பதுடன், கருத்துப்பாடுகளும் பரிமேலழகர் கருத்தோடு ஒப்பு நோக்கக்கூடியவைக ளாகவேயிருக்கின்றன.

நாயனார் பெருமான் திருவள்ளுவனார்,
"படைகொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொன்ற
னுடல்சுவை யுண்டார் மனம்" என்று ஊன்தின்றார்

மனம் மேன்மேலும் ஊனையே விரும்பித்தீங்கையே நினைத்தலியல் பென்பதை வலியுறுத்தி, பின், அது செய்தல் பாபம் என்பதை,

"அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றிறல்" என்பதனால் சுருக்கி விளக்கியுள்ளார்.

இவ்வாறே நாவலர் அவர்களும் இப்புராண வசன முகவுரைக்கண் சைவ சமயிகள் அநேகர் மாமிசபக்ஷணஞ் செய்கின்றார்களென்றும், ஆனால் விரதவேளைகளில் மாத்திரம் அவற்றை நீக்குகின்றார்களென்றும், அவ்வாறு சில வேளைகளிலேனும் நீக்கப்படுங்காரணத்தால், அது செய்தல் பாபமென்பது புலப்படுகின்றதென்றும், அதனால் புலாலை அறவே நீக்காமை பாபமென்றும் சாரம் படச் சுருக்கித் திரட்டி விளங்கக் கூறியுள்ளார்.

இங்ஙனம் நுண் மதியால் காலமும் முயற்சியுஞ் சுருங்க அருளும் பொருளும் விளங்கச் சுருக்கமுறையானே கூறியிருக்கும் அழகும், பரிமேலழகர் கருத்தை மேற்கொண்டிருக்கும் வனப்பும், ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

**திருவிளையாடற் புராண வசனம்:**-நாவலர் அவர்கள் இயற்றிய திருவிளையாடற் புராண வசனமும் சைவ நன்மக்களுக்கு, தலவிசேடம், தீர்த்த விசேடம் மூர்த்தி விசேட

மென்பவற்றை யுணர்த்துவதாய், சிவபெருமான் பாண்டியர்கள் பொருட்டுத் தண்ணளி சுரந்து புரிந்தருளிய அற்புத லீலா விநோதங்களையும், அவற்றின் உண்மைகளையுமுணர்ந்து சைவமாந்தர்கள் முத்தி கூடுதற்கேதுவாய், இனிமையுங் கருத்தும் பொருந்தி இலகுவான வசனமாயமைந்து சிந்தனைக்குரியதாயிருக்கின்றது.

***சிவாலய தரிசனவிதி:-*** இவரியற்றிய சிவாலய தரிசன விதியென்னும் நூலும், வேதாகம சாரங்களை, சங்கிரக முறையானே திரட்டி விளக்கும் மணியான வசனமாயமைந்து, பிரமாணமாகப் பல செய்யுட்களைக் கொண்டதாயுள்ளது. இதில் கடவுள் வழிபாடுசெய்யும் முறை வகைகளையும் பிறவுண்மைகளையுங் கண்டு தெளிந்துகொள்ளலாம். இதன் வசனப்பாங்கையும் பொருணயத்தையும் சைவருட் போற்றுதார் இல்லை. நாவலர் அவர்கள், இந்நூலின் கண்ணே,

> " திருக்கோயிலுக்குச் சமீபித்தவுடனே தூலலிங்கமாகிய கோபுரத்தை வணங்கி, இரண்டு கைகளையும் சிரசிலே குவித்துக்கொண்டு உள்ளே பிரவேசித்து, பத்திரலிங்கமாகிய பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்காரம் பண்ணக்கடவர் " என்றெழுதியுள்ள வசனத்தில்

கோபுரமே தூலலிங்கமெனவும், பலிபீடமே பத்திரலிங்கமெனவும், கூறியிருக்குமுண்மையை,

> " தூலலிங்க மாந்தூபி சூக்குமமா முள்ளிலிங்க
> மேலும் பலிபத் திரம் " என்று கூறியவாற்றுலுணர்க.

***சைவவினாவிடைகள்:-*** இவரியற்றிய சைவவினாவிடைகள், சைவத்தின் அருமையையும் பெருமையையும் விளக்குபவை. இவற்றில் வேதாகமோபனிடதங்களினதும், சைவ சித்தாந்தங்களினதும் உண்மைகள் தோன்ற, வினாவிடை ரூபமாக வியற்றியுள்ள வசனத்தின் செப்பங் காணக்கிடக்கின்றது.

**இலக்கணச் சுருக்கம் முதலியன:-**இவரியற்றிய இலக்கணச் சுருக்கம், குருசிஷ்யக்கிரமம், நித்திய கருமவிதி, சிராத்தவிதி, தர்ப்பணவிதியென்பவற்றின் மொழிபெயர்பு ஆகிய இந்நூல்களில் இவர் வசனத்தின் சீரையுஞ் சிறப்பையுங் காணலாம். இவையே தற்காலம் சைவநன்மக்கள் மரபுக்கு மொழிமணத்தையும் சிவநேயத்தையுமுண்டு பண்ணுஞ் சாதனங்களாயிருக்கின்றன.

**சைவதூஷண பரிகாரம் முதலியன:-**சைவதூஷண பரிகாரம், வச்சிரதண்டம், சுப்பிரபோத மென்பன சைவமணங்குன்று மென்று கண்டபொழுது இவராலியற்றப்பட்டன. இவை பரசமயத்தாரும் சைவசமயமே சமயமென வாயாரச் சொல்லி அதற்கட் புகுதற்குக் காரணமாயின வென்றால் இவற்றின் பொருள் உயர்வையும் வசனச் செம்மையையு மெவ்வாறு கூறுவது.

> "சைவசமயமேசமயம்சமயாதீதப்பழம் பொருளைக்
> கைவந்திடவேமன்றுள் வெளிகாட்டுமிந்தக் கருத்தை
> விட்டுப்
> பொய்வந்துழலும்சமயநெறிபுகுதவேண்டா முத்தி
> தருந்
> தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்
> தீரே"

என்றார் தாயுமானவரும்.

சைவ தூஷணபரிகாரம் வச்சிரதண்டம் முதலான ஆதியிற்செய்த சில நூல்கள் மாத்திரங் கடினமானவைகளாயிருந்தபோதிலும், பிற்காலத்திற் செய்தவைகள் பெரும்பாலும் இயற் சொற்களே விரவிய வசனப்பாங்கானவை யாயேயிருக்கின்றன.

இன்னும், இவர் வசனச்சிறப்பு, கிறீஸ்துமத பத்திரிகையாகிய உதயதாரகையிலும், இலங்கை நேசன் இலங்காபிமானி என்னும் பத்திரிகைகளிலுங் காணக் கிடக்கின்றது.

பெரியபுராண சூசனம்: இவரியற்றிய பெரிய புராண சூசனம் முழுவதும் முற்றுப் பெறவில்லை. முடிந்ததாகக் காணப்படும் ஒரு பகுதியின் வசனப்பாங்கும் கருத்துப் பாடும் எழுத அடங்காத அத்துணைச் சிறப்பு வாய்ந்ததாகும்.

இனி, செய்யுள்களின் பதவுரை முதலியனவும், நான்கு உரை நடை வகையுளொன்றாக இலக்கண விளக்கப்பாட்டியலுடையார் கூறியிருக்கின்றமையின், அவ்வுரை நடைப் பகுதிலும் நாவலர் அவர்கள் வல்லவராகவே யிருந்தனர்.

கோயிற்புராணவுரை, சைவசமயநெறியுரை, நன்னூற் காண்டிகையுரை சிவதருமோத்தரவுரை, மருதூரந்தாதியுரை, திருச்செந்தினிரோட்டயமக வந்தாதியுரை முதலியன வற்றிலே இவர் உரை நடையின் வன்மை காணக் கிடக்கின்றது, அன்றியும் இராமனாதபுரம் பொன்னுச்சாமித் தேவர் இந்நாவலர் பெருமானைக்கொண்டே திருக்குறள் பரிமேலழகர் உரை, திருச்சிற்றம்பலக் கோவையுரை என்னும் நூல்களைப் பரிசோதித்து அச்சிட்டமையானும், சி. வை. தாமோதரம் பிள்ளை சேனாவரையத்தைப் பரிசோதிப்பித்து அச்சிட்டமையானும் இவர் உரை நடை வல்லாரென்பது நன்கு விளங்குகின்றது.

இவ்வாறு நாவலர் அவர்கள் பலநூல்களையியற்றி, தண்டமிழ் மக்களுக்குப் பெரும்பயன் செய்தவாறுபோல, பிற்றைக்காலத்திருந்த சிவஞானமுனிவரும் ஒரு வாற்றான் செய்தனராக எண்ணப்படுகிறார். இவர் சைவ நன்மக்களுக்கு உபயோகமாகுமாறு சீரியநூல்கள் பலவியற்றிப் பெரும்பயன் செய்து தமிழ்நாடெங்கணும் புகழொளி பரப்பிய மகாமேதாவி யெனினும், இவரியற்றிய நூல்களின் பயனையும் நாவலர் அவர்கள் இயற்றிய நூல்களின் நயனையுஞ் சீர்தூக்கிப்பார்த்த ஆன்ற அறிஞர், சிவஞானமுனிவர் நூல்கள் சமயத்தையே பெரிதும் புகட்டுவனவா யமைந்துள்ளன வென்றும், நாவலர் நூல்கள் சமயமொழியறிவோடு இன்னும் பல குறிப்புக்களையுமுணர்த்து வனவாயமைந்துள்ளனவென்றும் தமது அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கின்றனர்.

இதனால் நாவலர் நூல்கள், "பழையனகழிதல்" என்ற தனுட்படாது ஆழ்ந்த செம்பொருளினைக்கொண்டு, வருங் காலத்துக்கும் புதியன புதியன வாகவே காணப்படுகின் றன வென்பது புலனாகின்றது. இதனை நாம் அனுபவவாயி லாகவும், நூல்கள் வழியாகவும், கன்னமூலமாகவுஞ் செவ் வனே யறிந்துகொள்ளலாம்.

இங்ஙனம் இவரியற்றிய நூல்கள், பொதுமறை யரு ளிய வள்ளுவனார், புலன் அழுக்கற்ற அந்தணர் கபிலனார், கூடத்தில் கூலவாணிகஞ் செய்த சாத்தனார், துறவறம் பூண்ட இளங்கோவடிகள், எளியவாழ்க்கையும் அரிய புல மையுஞ்செய்த ஒளவைப்பிராட்டியார் முதலிய அருந்தமிழ் வளர்த்த பெருந்தகைமைப் புலவர்களதும், சமயாசாரியர் களதும், சைவ சித்தாந்த நூலாசிரியர்களதும் சிந்தைக்குஞ் செயலுக்கும் முரணாது அவர் நூல்களை யாதாரமாகக் கொண்டே காணப்படுகின்றன. அன்றியும், "குன்றக்கூறன் மிகைபடக் கூறன்" முதலிய பத்துக்குற்றங்களினையுங் கடிந்து, "சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல்" முதலிய பத் தழகினைக்கொண்டு, அறம், பொருள், இன்பம், வீடு என் னும் நான்கு புருடார்த்தங்களுடனே, மேனாட்டு ஆராச்சி வாணரின் வன்மையானே வந்துற்ற இயற்கைப்பொருணூல் களின் அரிய சில குறிப்புக்களையுந் தன்னகத்தேயுடையன வாய் நிலவுகின்றன.

**பயன்:** நாவலர் அவர்கள், அருவினையும் ஆன்ற அறிவுங் கொண்டு இயற்றிய வசன நூல்களின் பயனாக நாமெல்லாம் மொழிஞானமும் சமய அறிவும் நிரம்பப்பெற்று, பதிபசு பாசவிலக்கணங்களையும், வேதாகம வுண்மைகளையும், விபூ திருத்திராக்ஷம் பஞ்சாக்ஷரம் என்பவற்றின் மகிமைகளை யும், குருலிங்கசங்கமங்களின் பெருமையையும், நித்திய கருமம் சிவாலய சேவை என்பவற்றின் முறைகளையும், விர தங்களையறிந்து அவற்றின் நெறிக்கணின்றொழுகும் ஒழுங் கினையும், சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு பாதங்களையும் அனுட்டித்து முத்திபெற்ற அடியாரின் அடி

மைத்திறத்தையும், சிவாலய நித்திய நைமித்திகங்களையும், சிவபூசை சிவதரிசனம் என்பவற்றின் அருமையையும் அறியவும் அனுட்டிக்கவுங் கூடியதாகவிருக்கின்றது.

இன்னும், சரியை கிரியையாளர் சிவனைப்பகிர்முகத்திற் கண்டு வணங்குவதும், யோகிகள் இருதயகமலத்திற்காணும் முறையும், மெய்ப் பொருளுணர்ந்த ஞானிகள் எங்குஞ் சிவமாகக் கண்டு ஆநந்த முறுமுண்மையும் அறியக்கிடக்கின்றது.

இதன் உண்மையாவது, தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்ம சுத்தி என்பவைகளைச் செய்து சிவரூபவுண்மையைத் தெளிந்து, அதனைச்சத்திய மெனக்கொண்டு, கேவல சகலாவத்தைகளிலும் அவை நீங்கவிளங்கும் அகப்பிரமஞானத்திலும் பொருந்தாமல், பரமஞானுசாரிய மூர்த்தங்களது அனுக்கிரக ஞானத்தினலே தற்பூரணமெல்லாம் அடங்கப்பெற்று, தற்செய்தியெல்லாம் அவரது அனுக்கிரகஞான செய்தியின் செய்தியாய், அறிதற்கரிய பரமாநந்தத்தை யெவ்விடத்துங் கண்டனுபவிப்பதேயாகும்.

இன்னும், மாகேசுரபூசையின் அருமையையும் அதன் பயனையும் நாம் அறிந்து அனுட்டிக்கும்படியாக நன்கு வலியுறுத்திக் கூறியுள்ளார்.

பிரமோத்தர காண்டமுடையாரும்,

"எள்ளற்படு கீழ்மக்களெனு மிழிந்த குலத்தோரானும்
வள்ளற் பரமன் றிருநீறு மணியுமணிந்த மாண்பினரை
யுள்ளத்துள்ளே யிருபோது முணர்ந்து தெருண்டு சிவனெனவே
கொள்ளத் தகையவறி வினரே பிறவிக்கடலிற் குளியாதார்" என்ற

பாசுரத்தால், சிவசின்னங்களைத் தரித்த மெய்யடியாரைக் கண்டவிடத்து அகமும் புறமும் மலர்ந்து அவர்களை யெதிர் கொண்டு அழைத்து உபசரித்து, அறுசுவையோடு நான்கு வித உணவுகளையும் மனமுவந்து அளித்தலாகும். அங்ஙனஞ் செய்யுங் குலமுங் குடியுமே பயன்படு நெறியிற் சேருமென்பதைப் புலப்படுத்தினர்.

இன்னும், நாவலர் அவர்களின் திருவினைப் பயனாகப் புராணம் முதலியவற்றின் வரலாற்றினையும், அவற்றை ஓதல் கேட்டல் என்பவற்றின் முறைகளையும், அவற்றை நியமமாகக் கொண்டாட வேண்டிய வழிவகைகளையும், அவற்றின் பயனையுமுணர்ந்து அனுஷ்டித்து முத்திகூடுதற் கேதுவாயிருக்கின்றது.

இங்ஙனம் மறைந்து கிடந்த சமயமொழி உண்மைகளையும், பிறநலன்களையும் வெள்ளிடை மலைபோல் வெளிப்படும்பொருட்டு, பெரும் பிரயாசையுற்று வசன நடையிலெழுதிய மைத்துள்ளனர். இங்ஙனஞ் செய்யுமிடத்து இடைஇடையே வந்ததுன் பினுக்குத் துயரினைக் கொடுத்து, தாமெண்ணிய கருமத்தினை எண்ணிய எண்ணியாங்கு சாதித்துள்ளனர்.

இவ்வண்ணம் இவர் முயற்சியானாய வசனநூல்களையும், வேறுபல அறிஞர் கருதிச் செய்தவசன நூல்களையுந் துலையிலிட்டுத் தூக்கியவாறுபோல, இவற்றின் தாராதமியங்களை ஆராய்ச்சியாற் கண்டுணர்ந்த பலபாஷாதுரந்தரர் பலர், நாவலர் நூல்களே சிறப்புடையனவாய்க் கருத்தைக் கவர்வனவென்றும், நாவலரே வசன நடையிற் கைதேர்ந்த கலைஞான அறிஞரென்றும் வாயாரச் சொல்லியிருக்கின்றனர்.

இவ்வுண்மையை, சில ஆண்டுகளுக்குமுன் சென்னபட்டணத்து ஹைக்கோட் நீதிபதிகளு ளொருவராயிருந்த கனம்பிரம்ம ஸ்ரீ T. சதாசிவ ஐயர் அவர்கள், அக்கிராசனம் வகித்து, டிஸ்டிக் முன்சீப், றிஜிஸ்டார், இஞ்சினீர், வைக்கீல் முதலிய பல உத்தியோகஸ்தர்களதும் பிரபுக்கள

தும் சமுகத்திலே, நமது ஆறுமுக நாவலரைக் குறித்துப் பேசும் பொழுது,

"நாவலரைப்போல முன்னும் இப்பொழுதும் தமிழ் வித்துவான்களில்லை, ஒருவேளையிருந்தாலும் அவரைப்போல் தமிழ்ப் பாஷையையும், நல்லொழுக்கத்தையும், சைவசமயத்தையும் வளர்த்து, நல்லவசன நடையில் நூல்களை யெழுதி அச்சேற்றி வெளிப்படுத்தி, தமிழ் நாட்டாருக் குபகாரஞ் செய்தவர் வேறெவருமில்லை" என்று கூறியுள்ளமையாலும்,

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி தமது, 'தமிழ் மொழி வரலாறு' என்னும் நூலின் கண்ணே, நாவலர் அவர்களை,

"வசன நடைகை வந்தவல்லாளர்" எனப்புகன்றுள்ளமையானும்,

திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ. எம், எல். அவர்கள், தமது, 'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் நூலிலே,

"உரை நடை நூலியற்றியவர்கள் யாவருள்ளும் தலை சிறந்தவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்கள்" என்று வரைந்துள்ளமையானும் அறிந்து தெளிந்து கொள்க.

நாவலர் அவர்கள், நாகரீக வளர்ச்சிக்கேற்ப அமையாதிருந்த தமிழ் மொழியை, பௌமிய நூல், வான நூல், மனித நூல், மனிதசமூக நூல், உயிர் நூல், உடனூல், சைவ சித்தாந்த நூல் முதலிய உறுப்புக்களால் அழகு படுத்தி ஆக்கம் பெறச் செய்து, ஐம்புல னொடுக்கி அருந்தவமியற்றும் பேரருள் ஞானிகட்கும், உலகவாழ்விலீடுபட்டு இருவினை புரியும் நந்தமிழ் மக்களுக்கும் பெரும் பயனளிப்பதற்காய் நாகரீக உலகத்தின் கட்படுத்திய பெரும் பேறே எம் பேறுயுள்ளது.

நாவலர் அவர்கள், இப்பேற்றை எமக்கருளா தொழியின், நாகரீகவளர்ச்சிக்கும் தமிழ் மொழி வளர்ச்சிக்குமுள்ள தூரம் குறுகாது பெருகிவிடும்; பெருகின் தமிழ் மொழி வளர்ச்சி அற்றுபோம்; போகவேசமயவறிவு குன்றிச்சமயமும்இல்லாது போய்விடும். இங்ஙனம் ஆகவொட்டாது, திருவருள் தூண்ட, வசனங்களை எழுதித்தந்த நாவலர் அவர்கட்குத் தமிழ்நாடு கடப்பாடுடையது.

# முடிவுரை.

தண்டமிழணங்கின் அருள்மிகப்பெற்றுக் கண்ணியம் வாய்ந்த ஆறுமுகநாவலர் பெருமான், செந்தமிழ் மொழியின் மணம் மிகவீசும் ஈழவளநாட்டிற்றோன்றியருளி, நற்றமிழுணர்வும், நற்சைவ போதமும் குன்றுதலின்றி மண்டுதற் பொருட்டு, பல் கலைஞானமும், சிவனருட் செல்வமும் பெற்று, சிவமணமும், தமிழ் மொழியின் றன்மணமும் வீசும் சைவப்பாடசாலைகளைஸ்தாபித்தும், பிழை பல பொதிந்த நூல்களைத்திருத்தியும், ஆவசியகமாக வேண்டப்படும் நூல்களுக்குரைவகுத்தும், புதிதாகப் பல நூல்களைச் செப்ப மானமுறையிலியற்றியும் உலகம் புகழும் பல தொண்டுகள் செய்துள்ளனர்.

“தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று” என்றார்

வள்ளுவனாரும்.

இவ்வாறே நாமும் தெவிட்டாத்தமிழின் சுவையினையறிந்து, அதனை நன்கு கற்று, நாநலம் வாய்ந்த நாவலர்களாகவும், பாவளன்சான்ற பாவலர்களாகவும், பண்பமைந்த பண்டிதர்களாகவும், வித்துவசிரோ மணிகளாகவுந் தலைவந்து, மக்களுக்கு அறிவினையூட்டி அவர்களை நன்னிலைக்கட்படுத்துதல்வேண்டும். நாம்பெற்றகல்வியின் பத்தால் அவர்களையும் மகிழ்வித்து நாமும் மகிழ்தல் வேண்டும்.

“தாமின் புறுவதுலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்”என்ற வள்ளுவர்

வாக்கினை நினைத்தல் வேண்டும். சமயமொழி வளர்ச்சிக்காகப் பல விடத்தும் பல்காலும் பிரசங்கங்கள் செய்தல் வேண்டும். உயர்ந்த அபிப்பிராயங்களை நல்ல வசன நடையில் நூல்களாக வியற்றுதல் வேண்டும். இயற்றும் நூல்களை நன்றாகப் பொருள் விளங்க வேண்டுமென்று கருதியும்,காலத்தின் அருமையைக் கருதியும் தெளிவான தமிழ் வசன நடையில் எழுதுதல் வேண்டும். கடினசந்திகளையும் பொருள் மயக்கமாவது பொருள் வேறுபாடாவது உண்டாக்கவல்ல சந்திகளையும் எப்பொழுதும் பிரித்தெழுதுதல் வேண்டும். சந்திசேராமையால் பொருள் கெடுமென்று கண்ட விடத்துமாத்திரஞ் சந்தி சேர்த்தெழுதுதல் நல்லது. இவைகளெல்லாம் வசனங்களை எழுதுவோரால் அநுசரிக்கப்படவேண்டிய விஷயங்களாகும் இம்முறைகளெல்லாம் நந்தமிழ் மக்களிடத்தே தலைத்தோன்றுமாயின், குலனருடெய்வங் கொள்கைமேன்மை யாதியாம் நல்லாசிரியன் இலக்கணங்களெல்லாம் இயற்கையானேயமையப்பெற்ற நாவலர் அவர்களின் செயல்கள் சிந்தையோடு செயலினுட் புகுமாயின், மனத்திடையே எழும் உட்கருத்துக்கள் வெளிச் சொல்லில் பிரதிபலிக்கும்; பிரதிபலிக்குந் தோறும் மனோபாவம் விரியுந்தோறும், புதிய விஷயங்கள் கண்டு பிடிக்கப்படுந்தோறும், கலைஞானவுண்மைகள் வெளிப்படுந்தோறும், வேற்று நாடுகளினின்றும் புதிய பொருள்கள் உட் புகுந்தோறும், தீஞ்சுவைபயக்கும் நந்தமிழ்ப் பாஷை ஆங்கிலம் பிரெஞ்சு முதலிய பாஷைகளைப்போல வளன் சுரந்து பெரும் பயன் றருவதாகும்.

வாழ்க தமிழ் மொழி:வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே.

# பிழை திருத்தம்.

## முன்னுரை.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 1 | 7 | கொளித்து | கொழித்து |
| 2 | 12 | வசன நாவலர் | நாவலர் வசன |

## நாவலர் வசன நடை

| | | | |
|---|---|---|---|
| 1 | 4 | புகுந்தயான் | புகுந்தயாம் |
| 4 | 4 | ஆயுமிருக்கின்றன | ஆயிருக்கின்றன |
| 5 | 2 | விக்கிரகம் | விகாரம் |
| 11 | 11 | உரியதாயிருக்கின்றன | உரியவாயிருக்கின்றன |
| 14 | 18 | மாண்மை | மாண்பை |
| 14 | 25 | செவியே | செவிகளே |

ச.ப.
18.8.82.